**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | Franklin (PW5) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி அம்மன்கோவிலில் குடியிருந்து கொண்டு கம்யூட்டர் சென்டர் கடை வைத்து நடத்தி வருகிறேன். 24.10.2021ம் தேதியன்றுமாலை 03.30 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட்டுவிட்டு மீண்டும் அம்மன்கோவிலில் உள்ள எனது கடைக்கு வருவதற்காக திரும்பினேன். அங்கு எல்லை மாகாளியம்மன் கோவில் உள்ளது. ரோட்டின் ஓரமாக ஒரு ஆண்நபரும், ஒரு பெண்மணியும் TVS XLலில் வந்து நின்று கொண்டிருந்தார்கள். அந்த ரோடு முத்தூரில் இருந்து சிவகிரி செல்லும் சாலையாகும். மேலும் அது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும் சாலையாகும். மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த ஒரு Yamaha Scooty இருசக்கர வாகனம் நல்ல ஸ்பீடாக வந்து ரோட்டில் நின்று கொண்டிருந்த அந்த பெண்மணிக்கு பின்புறமாக அடித்ததில் அந்த இரு நபர்களும் ரோட்டில் கீழே விழுந்துவிட்டார்கள். அந்த Yamaha வண்டியின் பதிவெண் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. தற்போது ஆஜரில் உள்ள எதிரி தான் விபத்தின் போது விபத்தை ஏற்படுத்தினாரா என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. விபத்தின் போது அந்த பெண்மணிக்கு தலையில் பலத்த அடிபட்டு ரத்தம் வந்தது. அந்த பெண்மணியுடன் வந்த மற்றொரு ஆண் நபருக்கு உடலில் சிராய்பு காயம் இருந்தது. இருவரையும் ஒரு ஆம்புலன்ஸ் மூலமாக சிவகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலீசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு விசாரித்தார்கள். போலீசாருக்கு நான் விபத்து நடந்த இடத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னையும் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.15 07:13:57 +0530

நான் அம்மன்கோவிலில் எந்த இடத்தில் கம்யூட்டர் சென்டர் வைத்துள்ளேன் என்றால் VAO அலுவலகத்திற்கு எதிரே வைத்துள்ளேன். எனது கடையில் இருந்து மேற்கே 100 மீ. தொலைவில் ஒரு பெட்ரோல் பங்க் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் இருந்த பெட்ரோல் பங்கிற்கும், அம்மன்கோவிலுக்கும் இடையே 2 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடம் சிவகிரி - முத்தூர் ரோட்டில் அமைந்துள்ள பெட்ரோல் பங்கிற்கு எதிர்புறம் என்றால் சரிதான். சிவகிரி - முத்தூர் ரோடு எப்போதும்போக்குவரத்து அதிகமுள்ள ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் ஒரு புறத்தில் இருந்து மறுபுறம் கடந்து செல்ல கவனித்துதான் செல்லவேண்டும் இல்லையெனில் விபத்து ஏற்படும் என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்திற்கு எதிர் திசையில் பெட்ரோல் பங்க், வலசுமணி லேத் அமைந்துள்ளது என்றால் சரிதான். பெட்ரோல் பங்க், வலசுமணி லேத் ஆகிய இடங்களில் CCTV கேமரா உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்வம் நடந்த எவ்வளவு நேரத்தில் சிவகிரி போலீசார் அங்கு வந்தார்கள் என்றால் 108 வாகனம் வரும்போது போலீசாரும் வந்துவிட்டார்கள். வழக்கு சம்பவத்தை பற்றி விசாரித்து போலீசார் எழுதிகொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரித்து எழுதிகொண்ட பிறகு அடிபட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸில் வைத்தார்கள்,108 ஆம்புலன்ஸ் போனபிறகு என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள படி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனக்கு வேண்டபட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணமே TVS XL வாகனத்தை ஓட்டி வந்த சிறுவனின் கவனகுறைவு மற்றும் அஜாக்கிரதை தான் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.15 07:14:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:6

| | | | |
|---|---|---|---|
| Name | சண்முகசுந்தரம் (PW6) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது அரச்சலூர், எலவநத்தத்தில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஆறுமுகம், அவரது மனைவி வெண்ணிலா அவர்களது மகன் பரமேஷ்வரன் ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 24.10.2021ம் தேதியன்று எனது நண்பரின் மனைவி வெண்ணிலாவும், அவரது மகன் பரமேஷ்வரனும் ஒரு இருசக்கர வாகனத்தில் சிவகிரி - முத்தூர் ரோட்டில் உள்ள எல்லைமாகாளியம்மன் கோவில் செல்வதற்காக ரோட்டின் இடது புறமாக நின்றுகொண்டிருந்தபோது ஒரு Yamaha பைக் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விபட்டு சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அடிபட்ட வெண்ணிலாவிற்கு தலையில் பலத்த காயம்இருந்தது. சுமார் 4 நாட்கள் கழித்து வெண்ணிலா சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். சிவகிரி போலீசார் சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்து சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த வெண்ணிலாவின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரிக்கும்போது நானும் உடன் இருந்தேன். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.15 07:14:15 +0530

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.15 07:14:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 130/2022**
**Prosecution Witness**:7

| Name | ஜெகநாதன் (PW7) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of September 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது சிவகிரி கந்தசாமிபாளையத்தில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஆறுமுகம், அவரது மனைவி வெண்ணிலா அவர்களது மகன் பரமேஷ்வரன் ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 24.10.2021ம் தேதியன்று எனது நண்பரின் மனைவி வெண்ணிலாவும், அவரது மகன் பரமேஷ்வரனும் ஒரு இருசக்கர வாகனத்தில் சிவகிரி - முத்தூர் ரோட்டில் உள்ள எல்லைமாகாளியம்மன் கோவில் செல்வதற்காக ரோட்டின் இடது புறமாக நின்றுகொண்டிருந்தபோது ஒரு Yamaha பைக் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விபட்டு சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அடிபட்ட வெண்ணிலாவிற்கு தலையில் பலத்த காயம்இருந்தது. சுமார் 4 நாட்கள் கழித்து வெண்ணிலா சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். சிவகிரி போலீசார் சேலம் மோகன் குமாரமங்களம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வந்து சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த வெண்ணிலாவின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரிக்கும்போது நானும் உடன் இருந்தேன். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.09.15 07:14:26 +0530

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.09.15 07:14:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.